பக்கங்கள்:-15

# காலை முரசு

## கிணற்றில் தவறி வீழ்ந்து 3 வயது சிறுவன் மரணம்

### பருத்தித்துறையில் சோகம்



(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 21 | வெள்ளிக்கிழமை | 06.12.2024 | அதிர்வு 126

# அரசியல் கைதிகள் விடுதலை குறித்து ஜனாதிபதி அநுரவுடன் பேசுகின்றேன்

## கஜேந்திரகுமாரிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வாக்குறுதி



இலங்கையில் நீண்டகாலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் 10 பேரின் விடுதலை குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேசுவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் வாக்குறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான 05



# இடைக்காலக் கணக்கறிக்கை மீது நாடாளுமன்றில் இன்று வாக்கெடுப்பு

## எதிர்ப்பதில்லை என்று தமிழரசுக் கட்சி தீர்மானம்

**2025 ஆம் நிதியாண்டின் முதல் 4 மாதங்களுக்கான அரச செலவினங்கள், மூலதனச் செலவுகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு, இதர கடன் சேவைக்கான அனுமதியைப் பெறும் இடைக்காலக் கணக்கறிக்கை நேற்று பிரதமர் ஹரிணி அமரசூரியவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தக் கணக்கறிக்கை மீது சபையில் நேற்று ஆரம்பமாகிய விவாதம் இன்றும் தொடரவுள்ளதுடன் இன்று மாலை இதன் மீது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.** 04

## தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 14 இந்திய மீனவர்கள் சிறைப்பிடிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வந்த மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைது 05

## இருபாலையில் 4 வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

சவர்க்காரத்தில் கால் வழுக்கியதில் சிறுவன் ஒருவன் கிணற்றில் 04




பொதுத் தேர்தல் முடிந்து விட்டது. ஆயினும் மழை விட்டும் தூவானம் விடாதமை போல சில சிக்கல்கள் – பிய்ச்சல் பிடுங்கல்கள் – இன்னும் காத்திருக்கின்றன.

தேர்தலில் பங்கு பற்றிய – போட்டியிட்ட – வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தேர்தல் பிரசார செலவு விவரங்களை இன்றைய தினத்திற்கு முன்னர் தேர்தல் ஆணையத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் அவர் போட்டியிட்ட தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கைக்கு அமைவாக தேர்தல் பிரசார செலவினத்துக்கு உச்சவரம்பு உண்டு. யாழ் மாவட்ட வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் சுமார் 40 லட்சம் ரூபா வரை செலவிட முடியும். அதற்குள்தான் ஒவ்வொரு வேட்பாளரும் கணக்கு காட்டுவார்கள். பொதுத்தேர்தல் சட்ட விதிகளின்படி போஸ்டர் அச்சிட்டு ஒட்டுவது விதிமுறை மீறல். ஆகையினால் பெரும் செலவில் போஸ்டர் அடித்து ஒட்டிய செலவினத்தை எந்த வேட்பாளரும் தமது பிரசார 05





# நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது எனவும், நாட்டுக்கு உகந்த தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைய முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அரசியல் ஸ்திரத்தன்மையைப் போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

முதலீட்டுச் சபைக்கு இருக்கும் பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற அர்ப்பணிக்க வேண்டும் என்றும், நாட்டுக்கு உகந்த முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு முதலீட்டுச் சபைக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

முதலீட்டுச் சபையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பெற்றுக்கொடுப்பதற்கும், புதிதாக 5 முதலீட்டு வலயங்களை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து 3 வயது சிறுவன் மரணம்

## பருத்தித்துறையில் சோகம்





கிணற்றில் தவறி வீழ்ந்து மூன்று வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லிபுரம் – திருமாள்புரம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

அதே இடத்தைசச் சேர்ந்த ரஜிவன் சுஜித் என்ற சிறுவனே உயிரிழந்தான்.

சிறுவன் கிணற்றில் வீழ்ந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தான்.

மேற்படி சிறுவன் வீட்டு முற்றத்தில் பலூனுடன் இருந்து விளையாடிய வேளை குறித்த பலூன் உடைந்த நிலையில் கிணற்றில் காணப்படுகின்றது.

பலூன் கிணற்றில் வீழ்ந்த நிலையில் அதனை மீக முற்பட்டபோது சிறுவன் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சடலம் மரண விசாரணைக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# வட்டுவாகல் பாலம் புதிதாக நிர்மாணிக்கப்படவேண்டும்

## வெள்ளப் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் நிவாரணம் வழங்குமாறு கன்னி உரையில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் எனவும், எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் அதனை உள்வாங்குமாறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

அதேவேளை, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஆற்றிய கன்னியுரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது கன்னியுரையில் மேலும் தெரிவித்ததாவது:–

“எனக்கு வாக்களித்த முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பலத்த அழிவுகள் ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களின் துன்பங்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பலத்த வெள்ள அனர்த்தம் காரணமாக பல வீதிகள் பாதிக்கப்பட்டதுடன், பல ஆயிரக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூடி நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மக்கள் துன்பத்தில் மூழ்கியுள்ளனர்.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாமல் காற்று, தொடர் மழை, பலத்த கடல் சீற்றம் போன்ற மிக மோசமான அனர்த்தங்கள் காரணமாக மிகவும் நொந்துபோயுள்ளனர்.

எனவே, விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு, கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மூன்று மாவட்ட செயலகங்களிலும் விசேட அனர்த்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்தி, அனர்த்தப் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் அறிந்துகொண்டார்.

குறித்த கூட்டங்களில் ஏனைய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள். துன்பங்களில் பங்கேற்றனர். அதிகாரிகளும் இடர் காலத்தின்போது தீவிரமாக உதவினர். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த விடயங்களுடன் ஒரு முக்கியமான விடயம், முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் கடந்த 1955ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர்.

பலத்த துன்பத்தை முல்லைத்தீவில் இருக்கும் இந்தப் பாலமும் அனுபவித்து வருகின்றது.

இந்தப் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது பாரிய சேதங்களுக்கு உள்ளானது. அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி பாலத்தின் இரு ஓரங்களிலும் பாதுகாப்பு கற்கள்கூட இல்லாமல் காணப்படுகின்றன.

மழைக்காலங்களில் நீரில் மூழ்கும் இந்தப் பாலத்தால் பயணிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் துன்பத்தைச் சொல்லில் வடிக்க முடியாது.

சுமார் 600 மீற்றர்தான் இந்தப் பாலத்தின் நீளம். நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பாலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு பலத்த அழிவுளை எதிர்நோக்கிய ஒரு மாவட்டமாகும். வேறெங்காவது குறிப்பாக தென்பகுதிகளில் இதுபோன்றதொரு பாலம் இருந்திருந்தால் எப்போதோ புதிய பாலம் அமைக்கப்பட்டிருக்கும்.

தொடர்ச்சியாகப் பலத்த இடர்பாடுகளைச் சந்தித்து வரும் முல்லைத்தீவு மக்களைப் போல் இந்தப் பாலமும் மக்களோடு சேர்ந்து துன்பத்தை அனுபவித்தே வருகின்றது.

இந்தப் பாலத்தையும் அதன் சேதங்களையும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் உபாலி சமரசிங்கவும் பார்வையிட்டார். அத்தோடு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன், வைத்தியர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் பார்வையிட்டிருந்தனர்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான் ஆகியோரும் இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என ஆதரவு தெரிவித்தனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகாரிகளைக் கேளுங்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேளுங்கள் இந்த வட்டுவாகல் பாலத்தின் தேவையை, அவசியத்தைப் பற்றிச் சொல்வார்கள்.

தயவு செய்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இந்த வட்டுவாகல் பாலத்தைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு ஆதரவு தாருங்கள்.

இந்த வட்டுவாகல் பாலத்தைப் புதிதாக நிர்மாணிக்க, அடுத்தவரவு – செலவுத் திட்டத்தில் உள்வாங்குகள்.” – என்றார்.

# அதிக வரி வருமானத்தை ஈட்டிய இலங்கை சுங்கத் திணைக்களம்




இலங்கை சுங்கத் திணைக்களம் வரலாற்றில் அதிக வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமான வரி வருமானத்தை இலங்கை சுங்கத் திணைக்களம் ஈட்டியுள்ளதாக மேலதிக பணிப்பாளர் நாயகமும் பேச்சாளருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

வரி வருமானத்தின் ஊடாக இந்த வருடத்தில் 1.53 ட்ரில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1.38 ட்ரில்லியன் ரூபாவை வரி வருமானமாக இலங்கை சுங்கத் திணைக்களம் ஈட்டியுள்ளது.

## இடைக்காலக் கணக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், வாக்கெடுப்பின்போது இடைக்காலக் கணக்கறிக்கையை எதிர்ப்பதில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானித்துள்ளனர்.

நேற்று இரவு நிகழ்நிலையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும், பாதுகாப்புத்துறைக்கான செலவினம் உச்சமாக இருந்தால், இடைக்கால கணக்கறிக்கையை ஆதரிக்காமல் – வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் ஒதுங்குவது என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் நிதியாண்டின் முதல் 4 மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கையைத் தயாரிப்பது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்குக் கடந்த நவம்பர் 25ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2 ஆயிரத்து 600 பில்லியன் ரூபா 2025 ஆம் நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு இடைக்காலக் கணக்கறிக்கையின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்காலக் கணக்கறிக்கையின் பிரகாரம் முதல் நான்கு மாதங்களுக்கான அரச வருவாய் 1600 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை கடன் வரம்பு 1000 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் மீண்டெழும் செலவீனங்களுக்கு 1000 பில்லியன் ரூபாவும், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு, வட்டி செலுத்தல் மற்றும் இதர கடன் சேவைகளுக்கு 1175 பில்லியன் ரூபாவும், மூலதனச் செலவுக்கு 425 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

என்றாலும், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பணிகள் இடம்பெற்று வருவதால் காலதாமதங்கள் ஏற்பட்டால் அடிப்படைக் கடன் பெறும் வரம்பை 4 ஆயிரம் பில்லியன் ரூபா வரை அதிகரிக்கவும், இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இறையாண்மை கடன் பத்திரங்களை வெளியிடவும் அரசு இடைக்காலக் கணக்கறிக்கையில் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## இருபாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

யாழ். இருபாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த நிரோசன் விமாத் (வயது 4) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

கடந்த 23ஆம் திகதி மேற்படி சிறுவன் அயல் வீட்டுச் சிறுவனுடன் விளையாடிவிட்டு வாளியைக்கொண்டு கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து கை கழுவியுள்ளான். இதன்போது சவர்க்காரம் கீழே வீழ்ந்த நிலையில் சவர்க்காரத்தின் மீது கால் மிதிபட்டதில் வழுக்கி கிணற்றினுள் வீழ்ந்துள்ளான்.

இந்நிலையில், மேற்படி சிறுவனை மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். இருப்பினும் சிறுவன் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளான்.

அவனது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலவினத்துக்குள் காட்டப் போவதில்லை. துண்டு பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டமை குறித்துக் காட்டக்கூடும். அது பெரும் செலவினமாக வராது.

ஆனால், இதில் – இந்த விடயத்தில் – ஒரு பெரிய அமுக்க வெடிகுண்டு வெளியே தெரியாமல் புதைந்து காத்துக் கிடக்கின்றது. தேர்தலில் வென்ற, தோற்ற பல வேட்பாளர்களின் குடியியல் உரிமைகளை மூன்றாண்டுகளுக்குப் பறிக்கும் ஆபத்து அதற்குள் தொங்கிக் கிடக்கின்றது.

முகப்புத்தகம் ஊடான பிரசாரத்துக்கும், டயலொக் நிறுவனம் போன்றவை ஊடாகவும் அவர்கள் செலவிட்ட பெருந்தொகை செலவினம்தான் அது. அந்தத் தொகையை மாற்றவோ, ஒளிக்கவோ, மறைக்கவோ முடியாது. ஒவ்வொரு வேட்பாளரும் தமது செலவின விவரங்களை சமர்ப்பித்த பின்னர் யாரேனும் ஒரு பிரஜை அந்த விவரத்தை தேர்தல் ஆணையத்திடமிருந்து விண்ணப்பித்து பெற முடியும். அந்த விவரத்துடன் முகப்புத்தக நிறுவனத்துடன் தொடர்பு கொண்டால் – தேவைப்பட்டால் நீதிமன்றம் மூலம் அணுகினால் – உண்மை தானாக வெளி வந்து விடும்.

தேர்தல் சமயத்தில் முகப்புத்தகத்தை அதிகம் பயன்படுத்திய யாழ் மாவட்ட வேட்பாளர்கள் பலருக்கு சிக்கல் முகப்புத்தக சனியன் வடிவத்தில் காத்துக் கிடக்கின்றது என்றே தோன்றுகின்றது.

\+ + +

பார் பெர்மிட்டுகள் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சாணக்கியன் நாடாளுமன்றுக்கு வெளியில் இன்னொரு விடயத்தையும் நினைவு கூர்ந்தார்.

“மட்டக்களப்பிலும் பார் பெர்மிட்டுகள் அரசியல் லஞ்சமாக வழங்கும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போது ஆரம்பத்திலேயே நாம் அதனைக் கடுமையாக எதிர்த்தோம். நான், சிறிநேசன், அரியநேத்திரன் போன்றோர் எல்லோரும் சேர்ந்து பல இடங்களில் அவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்தோம். எதிர்ப்புக் காட்டினோம். அதனால் அங்கு பார் பெர்மிட்டுகளைக் கண்ணை மூடிக்கொண்டு அரசியல் லஞ்சமாக வழங்க முடியாத களநிலையை ஏற்படுத்தினோம்” – என்றார் அவர்.

உண்மைதான். நான்கு லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியான பட்டியல்படி ஒரே ஒரு பெர்மிட்தான் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியபடி சுமார் ஒரு லட்சம் வாக்காளர்கள் கொண்ட கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்திற்கு 18 பார் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

எங்கேயோ இடிக்கின்றதே..? குறைந்த பட்சம், இந்நிலைமை ஏற்பட அனுமதித்த தவறைக் கூட ஒப்புக் கொள்ளாமல் இருப்பது வேறு அர்த்தங்களை – வியாக்கியானங்களை – தருகின்றதே...?

\+ + +

நாடாளுமன்றத்தில் இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மீதான இன்றைய வாக்கெடுப்பின்போது அதனை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று இரவு 8 மணி அளவில் நிகழ்நிலையில் கூடியது.

அதில் கட்சியின் எட்டு எம்.பிக்களும் அரசியல் குழுவில் எம்.பிக்கள் அல்லாத மற்றைய இருவரும் மட்டும் பங்குபற்றினர். அவர்கள் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் ஆகியோர். சுமந்திரன் போன்றோர் அழைக்கப்பட்டும் அவர்கள் நிகழ்நிலையில் பிரசன்னமாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. காரணம் தெரியவில்லை.

தமிழரசுக் கட்சி நிர்வாகம் இன்று இந்தச் சீரழிந்த நிலையில் அல்லாடுவதற்கான பிரதான காரணம் அதன் பிரதான நிர்வாகிகளே என்பது கண்கூடு. ஒரு தெளிவில்லாத, ஒழுங்கில்லாத தரப்புகளின் கைகளில் கட்சி நிர்வாகம் சிக்கி இருப்பதே அதற்குக் காரணம் என்பது ஐயம்திரிபற எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

அந்த நிலைமையிலிருந்து கட்சியை விடுபட விடமாட்டேன் என்று பிடிச்சுராவி போல நிற்கின்றார் போலும் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை வைத்திருக்கும் மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி.

ஏற்கனவே கட்சித் தலைவர் மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் அல்லாத அனைத்துப் பதவிகளில் இருந்தும் தாம் விலகுகின்றார் என்று மாவை சேனாதிராஜா எழுதிய கடிதத்தை உரிய நடவடிக்கைகளுக்காகத் தாம் ஏற்றுக் கொள்கின்றார் என்று மாவை சேனாதிராஜாவுக்கு பதிவுத் தபாலில் கடிதம் எழுதி இருந்தார் சத்தியலிங்கம். அதன் அர்த்தம் என்ன?

அரசியல் குழு, மத்திய குழு உறுப்பினர் பதவிகளில் இருந்தும் மாவை சேனாதிராஜா விலகுகின்றார் என்ற ராஜினாமாவை அவர் (சத்தியலிங்கம்) ஏற்றுக் கொள்கின்றார் என்பதுதானே அர்த்தம்? மருத்துவத் துறையில் சிறந்த நிர்வாகி என்று பெயரெடுத்த சத்தியலிங்கத்துக்குத் தான் ஏற்கனவே எழுதிய கடிதத்தின் அர்த்தம் தமக்கே தெரியாதா, என்ன?

அப்படி இருக்க, நேற்றைய நிகழ்நிலையில் நடந்த அரசியல் குழு கூட்டத்திற்கு மாவைக்கும் அழைப்பு அனுப்பி இருக்கின்றார் சத்தியலிங்கம் எனத் தெரிகிறது.

இத்தகைய வழ வழா, கொழ கொழா நிர்வாகம் தமிழரசில் நீடிக்கும் வரை கட்சி உருப்படவே போவதில்லை என்பது நிச்சயம்.

இனியாவது – தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைச் சுவீகரித்த பின்னராவது – கட்சியை ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருவதற்கு சத்தியலிங்கம் போன்றோர் தீர்க்கமாக முடிவெடுத்துச் செயற்பட முன் வர வேண்டும். இல்லையேல் தந்தை செல்வா கூறியமை போல, தமிழர்களை அல்ல, தமிழரசை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டி இருக்கும்.

நேற்றைய அரசியல் குழுவின் நிகழ்நிலை கூட்டத்திற்கு மாவை சேனாதிராஜா அழைக்கப்பட்டும் பிரசன்னம் தராத போதிலும், அவர் வரவில்லை என்று அதிகம் ஆதங்கப்பட்டவர் சிறிதரன் எம்.பிதான் என்று தெரிகின்றது.

அரசின் இடைக்காலக் கணக்கறிக்கையை எதிர்ப்பதில்லை என்று நேற்றிரவுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆயினும், பாதுகாப்புத் துறைக்கான செலவினம் உச்சமாக இருந்தால், இடைக்கால கணக்கறிக்கையை ஆதரிக்காமல் – வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் – ஒதுங்குவது என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு இந்திய இழுவைப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள், இழுவைப் படகுகளுடன் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

---

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, நாட்டின் சமகால நிலைவரம், புதிய அரசின் செயற்பாடுகள், நாட்டைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்கு அரசு கொண்டிருக்கும் இயலுமை உள்ளிட்ட விடயங்கள் பற்றி வதிவிடப் பிரதிநிதி, கஜேந்திரகுமார் எம்.பியிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார் எம்.பி., இந்தப் புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் ஊழல், மோசடிகள் குறையும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

“இருப்பினும் தற்போது இந்த அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைக்கப் பெற்றிருக்கும் நிலையில், ஏற்கனவே நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு முரணாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்காமல் தொடர்வதையோ அல்லது பொருளாதாரச் சுமையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதையோ நியாயப்படுத்த முடியாது. எனவே, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்குள் இந்த இரண்டு முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கின்றது.” – எனவும் அவர் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சிடம் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 8 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ஓர் உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் ஓர் உறுப்பினரும் எனத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 10 உறுப்பினர்களும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் கஜேந்திரகுமார் எம்பி. தெரிவித்தார். அதனை முன்னிறுத்தி அவரால் முன்னெடுக்கப்பட்டு வரும் நகர்வுகள் பற்றியும் மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சுக்கு விளக்கமளித்தார்.

மேலும் நீண்ட காலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் 10 பேர் தொடர்பில் பேசப்பட்ட போது, அவர்களது விடுதலை குறித்து தானும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேசுவதாக ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ், கஜேந்திரகுமார் எம்.பியிடம் வாக்குறுதியளித்தார்.



# டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் 15 பில்லியன் டொலர் ஈட்ட முடியும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு





"அரசியல் அதிகாரத்தினதும் டிஜிட்டல் தொழிநுட்ப நிபுணர்களினதும் எதிர்பார்ப்புகள் ஒன்றாக இருக்கும் நிலையில், நாட்டை டிஜிட்டல் மயமாக்கும் செயற்பாட்டிற்கு அனைத்து தொழில்வல்லுநர்களினதும் ஆதரவையும் எதிர்க்கின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் அமைச்சராகக் கடமைகளை நேற்று பிற்பகல் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"டிஜிட்டல் மயமாக்கல் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்குக் கொண்டு வர முடியும்.

வறுமையை ஒழித்தல், சமூக மனப்பாங்குகளை மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன அரசாங்கத்தின் பிரதான இலக்குகளாகும்.

கட்டிடங்களை நிர்மாணிப்பதனால் மாத்திரம் ஒரு நாடு அபிவிருத்தியடையாது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணத்துறை அமைச்சொன்று இருந்தது. தற்போது ஒவ்வொரு அமைச்சும் நிர்மாணப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வருடம் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக வேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. கட்டட நிர்மாணங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் மாத்திரமே இடம்பெற்றது.

தொழில் அமைச்சுக்கு இரண்டு பாரிய கட்டிடங்கள் உள்ள போதிலும் இன்னும் மக்களின் வரிசையில் குறைவில்லை. அதற்கான தீர்வுகளை வழங்க டிஜிட்டல் மயமாக்கல் அவசியமானது."– என்றார்.

டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 15 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில் டிஜிட்டல் பணியாளர்களை 2 லட்சமாக அதிகரிப்பது, முழு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான செயல் திட்டத்தை எதிர்வரும் 5 வருடங்களில் செயல்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, டிஜிட்டல் பொருளாதார பிரதியமைச்சராக பொறியியலாளர் எரங்க வீரரத்னவும் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# ரேணுக பெரேராவிற்கு பிணை வழங்கப்பட்டது



கைது செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுக பெரேராவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

மாவீரர் நினைவேந்தல் தொடர்பில் உண்மைக்கு புறம்பான தகவல்களை பரப்பிய குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அவர் நேற்று முற்பகல் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டார்.

இதன்போது, அவரை 10 லட்சம் ரூபா வீதம் இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



# 5 கிலோ நாடு அரிசி, 3 தேங்காய் சதொசவில் கட்டுப்பாடு விதிப்பு

லங்கா சதொச நிறுவனத்தினால் 5 கிலோ நாடு அரிசி மற்றும் 3 தேங்காய்களை நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

லங்கா சதொசவின் தலைவர் கலாநிதி சமித பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.


சதொசவில் நாடு அரிசி கிலோவொன்று 220 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

அதனைக் கொள்வனவு செய்த பெரும்பாலான வர்த்தகர்கள் வெளியே கொண்டுசென்று நாடு அரிசி கிலோவொன்றை 240 ரூபாவிற்கு விற்பனை செய்ததாகத் தகவல் கிடைத்தது.

இதனைக் கருத்திற் கொண்டு ஒரு தடவையில் 5 கிலோ நாடு அரிசியை மாத்திரம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக லங்கா சதொசவின் தலைவர் கலாநிதி சமித பெரேரா தெரிவித்துள்ளார்.

Canadian Tamils' Chamber of Commerce
CTCC
கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

# COMMUNITY MEETING



## ON ADDRESSING RECENT JEWELRY STORE ROBBERIES

a public meeting to foster dialogue and collaboration among the police, city councilors, jewelry store owners, and other concerned businesspeople in our community.

சமீபத்தில் தமிழ் நகைக்கடைகளில் நடந்த கொள்ளை சம்பவங்கள்குறித்தும் அதையொட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் போலீஸ், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகை கடை உரிமையாளர்கள், மற்றும் தமிழ் சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ளும் சமூகக் கூட்டம்.

FRIDAY, DECEMBER 6TH, 2024
AT 3:00 PM
CTCC BUSINESS CENTRE
80 TRAVAIL ROAD, UNIT 1,
MARKHAM

JOIN US:
416-335-9791
info@ctcc.ca
www.ctcc.ca





Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வக்கற்ற ஆட்சி!

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்றானானாம்' என்ற பேச்சுமொழி நம் மத்தியில் உண்டு. மதுபானசாலை உரிமம் ('பார் பெர்மிட்') விடயத்தில் தேசிய சக்தி அரசு நடந்து கொண்டிருக்கும் விதம் அப்படித்தான் உள்ளது.

முன்னைய ஆட்சியின் கீழ் நாடு முழுவதும் அரசியல் லஞ்சமாக பார் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டன என்பது தொடர்பான பிரச்சினையை அப்போது எதிரணியில் இருந்து கொண்டு கிளப்பிய பிரதான தரப்பே இப்போதைய ஆட்சியாளர்கள்தான். தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அவற்றைப் பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்துவோம் என்று அப்போது சண்டப்பிரசண்டம் பண்ணியோரும் - வீரவேசமாக உரைத்தோரும் - அவர்கள்தான்.

ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்று, அதிகாரத்தைக் கைப்பற்றி, பத்து வாரங்கள் கடந்து விட்டன. பொதுத் தேர்தல் சமயத்தில் கூட அந்த ஊழலில் - அரசியல் லஞ்ச மோசடியில் - சம்பந்தப்பட்ட ஓர் அரசியல்வாதியின் பெயரைக் கூட அரசுத் தரப்பினால் வெளிப்படுத்த முடியவில்லை.

பெரிய ஆரவாரங்கள் எல்லாம் பண்ணிக் கடைசியில் 'பார் பெர்மிட்' பெற்ற தரப்புகளின் பெயர் பட்டியலை மட்டுமே அரசு இப்போது வெளியிட்டிருக்கின்றது. இது 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த வேலை'க்கு ஒப்பானதுதான்.

இதற்கு அரசும் நாடாளுமன்றமும் தேவையில்லை. இரண்டரை மாதங்களும் அவசியமல்ல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சாதாரண குடிமகன் ஒருவன் விண்ணப்பித்தால் சுமார் ஒரு மாதத்தில் அந்த விவரத்தைப் பெற முடியும்.

அது மாத்திரமல்ல, புதிதாக அனுமதி - பார் - பெர்மிட் பெற்று திறக்கப்பட்ட மதுபானச் சாலையின் பெயர்ப் பலகையை நேரில் போய்ப் பார்த்தாலே உரிமையாளர் பெயர் தெரிந்து போய் விடும்.

இந்த பார் பெர்மிட் பெற்ற பட்டியல் காரர்களுக்கு அவற்றை வழங்க அரசியல் லஞ்சம் பெற்ற - முன்னைய அரசுத் தலைவர்களிடம் அந்தப் பெர்மிட்டுகளுக்குப் பரிந்துரைத்த - அரசியல்வாதிகளின் விவரங்கள்தான் இதில் விவகாரத்துக்கு உரிய விடயம். அவர்களின் விவரங்களைத் துருவி ஆராய்ந்து, கண்டறிந்து, அம்பலப் படுத்துவதற்கு வக்கற்ற இந்த அரசுத் தலைமை, பார் பெர்மிட் பெற்றவர்களின் பட்டியலை வெறுமனே வெளியிட்டு மக்கள் காதில் பூச்சுற்றுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அரசுத் தலைமையின் இயலாமையை - வக்கற்ற போக்கை - நேற்று நாடாளுமன்றத்தில் பிய்த்து உதறியிருக்கின்றார் தமிழரசின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

இவ்வாறான பார் பெர்மிட் வழங்கப் பட்டபோது அது தொடர்பான விண்ணப்பங்களைப் பரிந்துரைத்த அரசியல்வாதிகளின் பெயர் பட்டியலை - விவரங்களை - தேடிக் கண்டுபிடித்து அம்பலப்படுத்துவதில் அரசுக்கு என்ன சிக்கல் என்பதுதான் பொதுமக்களின் நியாயமான கேள்வி.

"பார் பெர்மிட் விண்ணப்பங்களுக்கு பரிந்துரைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட சிபார்சுக் கடிதங்கள், ஏனைய விண்ணப்ப விடயங்கள் தற்போது எங்கே உள்ளன என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது குற்றப் புலனாய்வாளர்கள் அல்லது ஜனாதிபதி செயலகத்தால் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பது தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டும்." - என்று சாணக்கியன் இந்த அரசை நோண்டியிருக்கின்றார்.

நாட்டில் பார்பெர்மிட் பெற்றுக் கொடுப்பதில் அரசியல் லஞ்சம் தலைவிரித்தாடியது என்பது பொதுமகளுக்கு அப்பட்டமாகத் தெரிந்த உண்மை. அது தொடர்பில் நாட்டுக்குள்ளேயே விசாரித்து உண்மைகளைக் கண்டுபிடிக்க வக்கற்ற இந்த அரசு, முன்னைய அரசின் காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள், முறைகேடுகள், லஞ்ச லாவண்யங்கள் எல்லாவற்றையும் கண்டுபிடித்து அம்பலப்படுத்தி, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தப் போகிறோம் எனச் சூளுரைப்பதும், நாட்டைச்சூறையாடி வெளிநாட்டில் பதுக்கிய சொத்துகள், பணத்தை மீளக் கொண்டு வரப்போகின்றோம் எனப் பிரபலாபிப்பதும் 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்' எனும் கதைக்கு ஒப்பானதுதான்.



# ஹைதராபாத்தில் 'புஷ்பா 2' வெளியீடு; நெரிசலில் சிக்கி தாய் பலி, மகன் காயம்

ஹைதராபாத்தில் உள்ள திரையரங்கில் 'புஷ்பா 2: தி ரூல்' படத்தின் சிறப்பு காட்சியை பார்க்கச் சென்ற 35 வயதுடைய பெண்ணொருவர் நெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

மேலும், அவரது ஒன்பது வயதுடைய மகன் பலத்த காயமடைந்துள்ளார் என ஹைதராபாத் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் படத்தின் சிறப்பு காட்சிக்காக வருகை தந்திருந்த தெலுங்கு முன்னணி நடிகர் அல்லு அர்ஜுனைப் பார்க்க ஏராளமான மக்கள் கூட்டம் அலை மோதியமையினால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திரையிடலுக்கு இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்துடன் வந்திருந்த நடிகரைக் காண ரசிகர்கள் குவிந்ததால் திரையரங்குக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். ஒருகட்டத்தில் கூட்டத்தை சமாளிக்க முடியாமல் போன நிலையில், பொலிஸார் தடி அடி தாக்குதல் நடத்தியதால் பயங்கர நெரிசல் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இந்த நெரிசலில் சிக்கி ரேவதி என்ற 39 வயது பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.

அத்துடன், அவரது மகன் உள்ளிட்ட 2 பேர் காயமடைந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட திரையரங்க நிர்வாகம் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.





# ஐரோப்பிய செயற்கைக் கோள்களுடன் விண்ணில் பாய்ந்தது இந்திய ரொக்கெட்

ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் (ESA) இரு செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் பி.எஸ்.எல்.வி. சி-59 ரொக்கெட் நேற்று வியாழக்கிழமை வெற்றிகரமாக விண் நோக்கி ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி-சி 59 மற்றும் ப்ரோபா-3 என்ற செயற்கைக்கோள்களுடன் ரொக்கெட் நேற்று மாலை 4:04 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் - நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம் இடையே அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் பின்னர் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான கொரோனாவை பற்றிய துல்லிய ஆய்வுக்காக இந்த செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.



இதற்காக ஏவப்படும் இரண்டு செயற்கைக் கோள்களின் மூலம், ஓர் ஆண்டில் 50 முறை செயற்கையாக சூரிய கிரகணத்தை உருவாக்கி, இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். அத்தகைய ஆய்வுகள் ஒவ்வொன்றும் ஆறு மணி நேரத்திற்கு நீடிக்கும்.

இதன்மூலம், நெருங்கவே முடியாத, அவ்வளவு எளிதில் ஆராய முடியாத சூரியனின் மேற்பரப்பில் இருக்கும் கொரோனா என்ற படலத்தை விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவுள்ளனர்.




# தென் கொரிய ஜனாதிபதிக்கு எதிராக தேசத்துரோக விசாரணைகள் ஆரம்பம்

தென் கொரியாவில் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு எதிரான தேசத்துரோக குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையை அந்நாட்டு பொலிஸார் நேற்று வியாழனன்று ஆரம்பித்தனர்.

தென் கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனத்தின் தகவல்களுக்கு அமைவாக, குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபியிடம் விசாரணை மேற்கொள்ள தேசிய பொலிஸார் முகவர் நிலையத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இராஜினாமா செய்த பாதுகாப்பு அமைச்சர் கிம் யோங்-ஹியூன், இராணுவ தளபதி ஜெனரல் பார்க் அன்-சு மற்றும் உள்துறை அமைச்சர் லீ சாங்-மின் ஆகியோர் மீதும் தேசத்துரோகம் மற்றும் பிற தொடர்புடைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

தென் கொரியாவின் தேசிய சட்டமன்றம் ஜனாதிபதி யூன் சுக் யோலின் (Yoon Suk Yeol) இராணுவச் சட்ட மூலத்தை தீர்மானமாக இரத்து செய்ததை அடுத்து, நாடு கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ஒரு வியத்தகு அரசியல் எழுச்சியைக் கண்டது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தென் கொரியாவின் முதல் இராணுவச் சட்டத்தை திணிக்க யூனின் அதிர்ச்சி முயற்சி, அதன் நவீன ஜனநாயக வரலாற்றில் நாட்டை அதன் ஆழ்ந்த கொந்தளிப்பில் ஆழ்த்தியது.

இது நாடு முழுவதும் பரவலான கோபம் மற்றும் எதிர்ப்புக்களை தூண்டியதுடன், ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தில் பல தசாப்தங்களில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதன் பின்னணியில், யூனுக்கு எதிரான முறைப்பாடுகள் அரசுத் தரப்பிலும் உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவரது தோல்வியுற்ற இராணுவச் சட்ட நடவடிக்கையை அடுத்து, ஜனநாயகக் கட்சியின் தலைமையிலான ஆறு எதிர்க்கட்சிகள் யூன் மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் ஆகியோருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானத்தை தாக்கல் செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சர் கிம் இராஜினாமா செய்ததையடுத்து அவர் தனது பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யூனுக்கு எதிரான பதவி நீக்க வாக்கெடுப்பு நாளை சனிக்கிழமை நடைபெற உள்ளது.










# புதிய வகையான நோய்த்தொற்று; கொங்கோ குடியரசில் 79 பேர் பலி

கொங்கோ குடியரசில் பரவிவருவிகின்ற புதிய வகையான நோய்த்தொற்று காரணமாக 79 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த நாட்டு சுகாதாரத்துறை இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் அதிகமானோர் 15 முதல் 18 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோய்த்தொற்றுக்கு காய்ச்சல், தலைவலி, இருமல், சுவாசிப்பதில் சிரமம் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் காணப்படுமெனவும் அந்த நாட்டு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# மின் அமைப்பில் கோளாறு; கியூபா முழுவதும் மின்தடை



கியூபாவின் முக்கிய மின் அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதனால், லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் கியூபாவிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ஆசிய பசுபிக் அழகுசாதன போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றார் அனிதா





"சிகையலங்காரம் மற்றும் அழகு சாதன துறையில் ஈடுபட்டுவருபவர்கள் ஆர்வத்துடனும் சிறப்பாகவும் இத்துறையில் ஈடுபட்டால், சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி தாங்களும் ஒரு சாதனையாளர்களாக வரமுடியும்."

– இவ்வாறு கம்போடியாவில் நடைபெற்ற அழகுசாதனப் போட்டியில் பங்குபற்றி இலங்கை சார்பாக மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்ட அனிதா விநாயக காந்தன் தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் சிகையலங்காரம் மற்றும் அழகுசாதன போட்டி அண்மையில் கம்போடியாவில் நடைபெற்றது.

இதில் மணப்பெண் மற்றும் சிகையலங்கார முக ஒப்பனையில் கலந்துகொண்டு யாழ். மல்லாகத்தைச் சேர்ந்த அனிதா விநாயக காந்தன் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வெள்ளவத்தை கோல்ட் கிரிக்கெட் கிளப்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது அனிதா விநாயக காந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஆசிய பசுபிக் சிகையலங்காரம் மற்றும் அழகுசாதனதுறை (அப்கா-APHCA) தலைவர் சஹான் குணசேகர, செயலாளர் ஹசினி குணசேகர மற்றும் நடுவராக பங்காற்றிய ஹேமி விஜயசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இந்த சர்வதேச போட்டியில் மணப்பெண் மற்றும் சிகையலங்கார துறையில் ஈடுபட்டு வரும் இலங்கையைச் சேர்ந்த அனிதா விநாயககாந்தன், யமுனா நடராஜா, புஸ்பலதா விஜயரங்கர், நிதர்ஷனா திலக்ஷன், சுலக்ஷனா வோல்டன் சஞ்சீவன், சசிகலா தம்பிராஜா மற்றும் சிவகுமாரி சுமன்ராஜ் ஆகிய ஏழு பெண் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் 17 நாடுகள் பங்குபற்றிய நிலையில் இலங்கைக்கு மூன்றாமிடம் கிடைத்துள்ளது.

இந்த சர்வதேச போட்டியில் முதலாமிடத்தை கம்போடியாவும், இரண்டாமிடத்தை தாய்வானும் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# லொஹான் ரத்வத்தேவுக்கும் அவரது மனைவிக்கும் பிணை

கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மற்றும் அவரது மனைவி ஆகியோர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.


லொஹான் ரத்வத்தே மற்றும் அவரது மனைவிக்கு தலா 25,000 ரூபா ரொக்கப் பிணையும் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளும் விதிக்கப்பட்டன.





மேலும் லொஹான் ரத்வத்தேயிற்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொஹான் ரத்வத்தேயின் மனைவிக்கு சொந்தமான மிரிஹானை எபுல்தெனிய சாலாவ வீதியிலுள்ள 3 மாடி வீட்டிலிருந்து இலக்கத் தகடுகள் அற்ற சொகுசுக்கார் சட்டவிரோதமான முறையில் பொருத்தப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# வங்காள விரிகுடாவில் நாளை காற்று சுழற்சி

வங்காள விரிகுடாவில் நாளை புதிய காற்று சுழற்சி உருவாகும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இலங்கைக்கு அருகே வரும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்மேற்கு வங்காள விரிகுடாவின் தெற்கு அந்தமான் தீவுகளுக்கு அருகில் மீண்டும் ஒரு குழப்பநிலை உருவாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் இது புயலா, காற்ற முத்த தாழ்வு மண்டலமா என்பதைக் கூற முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 9, 10, 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் மறைமுக பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் 9 ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மழை பெய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கொழும்பு செத்தம் வீதி ஹோட்டலொன்றில் தீ

கொழும்பு கோட்டை, செத்தம் வீதியிலுள்ள ஹோட்டலொன்றின் 7 ஆவது மாடியில் நேற்று தீ பரவியது.

சம்பவ இடத்திற்கு 6 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்று தீயணைப்பு சேவை திணைக்களம் தெரிவித்தது.

தீ பரவியதை அடுத்து சுவாசக் கோளாறு ஏற்பட்டதால் நோய்வாய்ப்பட்ட சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.12.2024




நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவினை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கி யிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.

அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடின-மாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையம் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.




இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.




இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலிக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதட்டத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காண லாம்.தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.

நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.

தோல் ஒவ்வாமை காரணமாக தூக்கம் கெடும்.




இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும்.இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர் கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவிற்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.




இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும். திருப்திகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.12.2024




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்ப்பாராத நன்மைகள் இன்று காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியைப் பொறுத்த வரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வுகளை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத்திருங்கள். இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்திற்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக தோள் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது உங்கள் மகிழ்ச்சியை பாதிக்கும்.




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப்பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துனையிடத்தில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் சேறாக இருக்கும்.

